Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

01 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க

01. அரசியல் என்பது
1. மோதால் தீர்வுடன் தொடர்புபட்டதாகும்.
2. பிரயோக அரசியலுடன் தொடர்புபட்டதாகும்.
3. அரசியல் விளையாட்டுடன் தொடர்புபட்டதாகும்.
4. அரசியலைக் கற்றலுடன் தொடர்புபட்டதாகும்.
5. தொழில்சார் அரசியல் வாதியுடன் தொடர்புபட்டதாகும். (……)

02. அரசறிவியல் என்பது
1. கோட்பாட்டு அரசியல் பற்றியதாகும்.
2. அரச அதிகாரத்தைக் கற்கும் கற்கையாகும்.
3. மோதலுக்கான தீர்வை முன்வைக்கும் கற்கையாகும்.
4. பிரயோக அரசியலை விஞ்ஞான ரீதியாகக் கற்கும் கற்கையாகும்.
5. அரசியல் விளையாட்டின் நடைமுறைப்படுத்தும் கற்கையாகும். (……)

03. அரசறிவியலின் உப துறைகளாவன,
1. அரசியலை மோதல்களாகும்.
2. அரசியலை தத்துவங்களாகும்.
3. அரசியலை கோட்பாடுகளாகும்.
4. அரசியலை நிறுவனங்களாகும்.
5. அரசியலை கருத்தியல்களாகும். (……)

04. அரசியல் கட்சிகள் என்பது.
1. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் கொண்டவையாகும்.
2. அரசியல் செயற்பாட்டில் மறைமுகமாகச் செயற்படுகின்றனவாகும்.
3. சமூக அதிகாரத்தை ஆணையதிகாரமாக மாற்றுகின்ற சக்தி கொண்டவையாகும்.
4. சமூக நலன்களை ஒன்றுதிரட்டும் சக்தி கொண்டவையாகும்.
5. எந்தவழியினூடாகவும் அதிகாரத்தைக் கைப்பற்றும் திறன் கொண்டவையாகும். (……)

05. அமுக்கக்குழுக்கள் என்பது
1. சனநாயக ஆட்சியைப் பாதுகாக்கின்றன.
2. மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றன.
3. நல்லாட்சியை உறுதிப்படுத்துகின்றன.
4. ஊர்வலங்கள் மற்றும் சனநாயக எதிப்பியக்கங்களில் ஈடுபடுகின்றன.
5. அரசியலில் பக்கச்சார்பற்றதாகச் செயற்படுகின்றன. (……)

06. இலங்கையின் அரசியல் கட்சி முறையானது
1. பல கட்சி முறையினைக் கொண்டதாகும்.
2. காடர் கட்சிகளை மட்டும் கொண்ட பல கட்சி முறையினதாகும்.
3. இனத்துவ அடிப்படையில் அமைந்த சில கட்சிகளைக் கொண்ட பல கட்சி முறையினதாகும்.
4. முதலாளித்துவ, சோசலிச, சமூக சனநாயகக் கட்சிகளை உள்ளடக்கிய பல கட்சி முறையினதாகும்.
5. இரு பிரதான அரசியற் கட்சிகளின் ஆதிக்கத்தைக் கொண்ட பல கட்சி முறையினதாகும். (……)

07. இறைமை என்பது
1. அது அரசின் மீயுயர் அதிகாரமாகும்.
2. அது ஏனைய சமூக தாபனங்களை விட உயர்ந்ததாகும்.
3. அதனைப் பிரிக்கமுடியாது ஆனால் ஒப்படைக்கமுடியும்.
4. அது அரசின் சட்டங்களுக்கு சட்டத்தன்மையை வழங்குகிறது.
5. அது அரசின் சார்பாக அரசாங்கத்தால் பிரயோகிக்கப்படுகிறது. (……)

08. நகர அரசு என்பது
1. நேரடி ஜனநாயகம் கொண்டதாகும்.
2. முறையான அரசாட்சி கொண்டதாகும்.
3. பொறுப்புடைய பிரசைகள் மன்றத்தைக் கொண்டதாகும்.
4. சமத்துவ அரசியல் உரிமைச் சமூகத்தைக் கொண்டதாகும்.
5. பணிசார்பற்ற அரசியல் செயற்பாடுகளைக் கொண்டதாகும். (……)

09. கோத்திர அரசுகளின் மூலக்கொள்கை,
1. ஆண்களின் தலைமைத்துவத்தில் இருத்தல்.
2. பலம்மிக்க அதிகார குழுமுறை காணப்படுத்தல்.
3. தன்னிறைவுச் சமூகம் காணப்படுதல்.
4. சிரேஷ்டத்தன்மையின் அடிப்படையில் தலைமைத்துவம் இருத்தல்.
5. வரம்பற்ற அதிகாரம் கொண்ட தலைமைத்துவம் இருத்தல். (……)

10. முடியாட்சி முறையின் மூலக்கொள்கை,
1. ஆட்சியாளர்கள் அரச பரம்பரையிலிருந்து தெரிவுசெய்யப்படுதல்.
2. அரச ஆட்சியாளரிடம் அதிகாரம் குவிந்து காணப்படுதல்.
3. ஆட்சியாளர்கள் தெய்வீக வழியுரிமையைப் பின்பற்றி நடத்தல்.
4. இவ்வரசில் பிரசைகளுக்குப் பதிலாக அடிமைப்பட்டவர்களே இருத்தல்.
5. இவ்வரசின் தலைமைத்துவம் ஆண்களிடம் மட்டும் இருத்தல். (……)

11. தாராள ஜனநாயக அரசொன்றின் அடிப்படைப் பண்புகள்,
1. ஜனநாயக அரசு நிலவுதல்.
2. பல கட்சிமுறைமை நிலவுதல்.
3. அரசுடமை நிலவுதல்.
4. ஏற்றத்தாழ்வு நிலவுதல்.
5. தனியார் உடைமை நிலவுதல். (……)

12. சோசலிச அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகள்
1. வர்க்க சமத்துவம் ஒழிக்கப்பட்டிருத்தல்.
2. நடைமுறைசார் சமத்துவம் அமுலிலிருத்தல்.
3. ஒரு கட்சி மட்டும் நடைமுறையில் இருத்தல்.
4. தனிநபர் சுதந்திரம் அங்கீகரிக்கப்படாமல் இருத்தல்.
5. இலாப நோக்குடைய தனியார் பொருளாதாரம் நடைமுறையிலிருத்தல். (……)

13. பாசிச அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளாவன
1. தனிநபர் சர்வாதிகாரம் நிலவுதல்.
2. ஒரு தனிக்கட்சி முறை நிலவுதல்.
3. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் நிலவுதல்.
4. சமத்துவத்துக்குப் பதிலாக அசமத்துவம் நிலவுதல்.
5. சமூகம் இராணுவமயப்படுத்தப்பட்டிருத்தல். (……)

14. தலையிடா அரசின் மூலக்கொள்கை,
1. நலன்புரித்திட்டங்களை முற்றாக உதிர்த்திடுதல்.
2. தனிமனித தத்துவம் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்.
3. தனியார் சொத்துரிமை அங்கீகரிக்கப்பட்டிருத்தல்.
4. பொருளாதாரம் வர்த்தக சக்திகளினால் மேற்கொள்ளப்படுதல்.
5. சுதந்திரமான போட்டிகர பொருளாதாரம் அமுலிலிருத்தல். (……)

15. நலன்புரி அரசின் மூலக்கொள்கை,
1. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தல்.
2. மக்களின் சேமநலத்தில் அக்கறை கொள்ளுதல்.
3. அரசின் காட்டுப்பாட்டிலிருந்து பொருளாதாரம் விடுபட்டிருத்தல்.
4. அரசின் கட்டுப்பாட்டின் கீழ் பொருளாதாரம் இருத்தல்.
5. புறக்கணிக்கப்பட்ட தனியார்துறை மீது கவனம் செலுத்துதல். (……)

- 16 தொடக்கம் 20 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடை தருக.

16. குறைந்தபட்ச அரசின் மூலக்கொள்கை தொடர்பான பொருத்தமற்ற கூற்று யாது?
1. சமூக விவகாரங்களில் குறைந்த முகாமைத்துவத்தைக் கொண்டிருத்தல்.
2. தனியார் துறையிடம் பொருளாதார முகாமைத்துவம் வழங்கப்பட்டிருத்தல்.
3. பொருளாதார விடயங்களில் அளவுக்கு மிஞ்சிய தலையீட்டைக் கொண்டிருத்தல்.
4. அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு உகந்த சூழலை ஏற்படுத்துதல்.
5. சிவில் சமூகச் செயற்பாட்டுக்கு அனுமதியளித்தல். (……)

17. தோமஸ் ஹொப்சின் இயற்கைச் சமூகம் தொடர்பான பொருத்தமற்ற கூற்று யாது?
1. சமூக வாழ்க்கை இன்பகரமானதாக இருத்தல்.
2. சமூக வாழ்க்கை துன்பகரமானதாக இருத்தல்.
3. சமூக வாழ்க்கை இழிவானதாக இருத்தல்.
4. சமூக வாழ்க்கை கொடுமையானதாக இருத்தல்.
5. சமூக வாழ்க்கை மரண பயம் கொண்டதாக இருத்தல். (……)

18. ஒற்றையாட்சி தொடர்பான பொருத்தமற்ற கூற்று யாது?
1. இறைமை பிரிபடாதிருக்கும்.
2. பிரிபடாத அரச விசுவாசமிருக்கும்.
3. ஒரு மையத்தில் அரச அதிகாரம் குவிந்திருக்கும்.
4. இரு மட்டங்களிலான அரசாங்கங்கள் நிலவும்
5. தனியான நிருவாகம் மற்றும் நீதிமுறைமை நிலவும் (……)

19. **'**வலுக்குவிப்பு கட்டாயமாக அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு காரணமாகும்**'**. இந்தப் பொருள் விளக்கத்தை முன்வைத்தவர்.
1. கார்ள்மாக்ஸ் ஆவார்.
2. மொண்டெஸ்கியூ ஆவார்.
3. சிசரோ ஆவார்.
4. பொலிபியஸ் ஆவார்.
5. பிலிப்பெட்டி ஆவார். (……)

20. **'**மனிதன் சுதந்திரமாகப் பிறப்பினும் அவன் எங்கும் சங்சிலியால் பிணைக்கப்படுகின்றான்**'** இந்தப் பொருள் விளக்கத்தை முன்வைத்தவர்.
1. J.J. ரூசோ ஆவார்
2. A.V டைசி ஆவார்.
3. J. பைனர் ஆவார்.
4. ஜோன் லொக் ஆவார்
5. பிரெடரிக் ஏங்கல்ஸ் ஆவார்.

(……)

21. உலக அரச மாதிரிகளில் முதல் இரு அரசுகளையும் குறிப்பிடுக.

**1)…………………………………** **2)………………………………**

22. சிம்பாவே மற்றும் திபெத் நாட்டில் நடைமுறையிலுள்ள கோத்திரங்களின் பெயரினை முறையே குறிப்பிடுக.

**1)…………………………………** **2)………………………………**

23. தென்னாபிரிக்கா மற்றும் உகண்டா நாட்டில் நடைமுறையிலுள்ள கோத்திரங்களின் பெயரினைக் குறிப்பிடுக.

**1)…………………………………** **2)………………………………**

24. புராதன கிரேக்க நகராட்சி தொழிற்பட்ட நகரங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

25. கிரேக்க நகர அரசு முறையில் காணப்பட்ட சமூக வகுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

26. கிரேக்க நகர அரசு முறையில் அரசியல் அதிகாரமற்ற சமூக வகுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

27. கிரேக்க நகர அரசு முறையில் காணப்பட்ட அரசியல் மாதிரிகள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

28. முடியாட்சியின் மறுபெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

29. கீழே தரப்பட்டுள்ள இரண்டு ஆங்கில மொழிப்பதத்தின் தமிழ் வடிவத்தை குறிப்பிடுக.
**1)Coloninal …………………………** **2)Coloneys …………………**

30. ஆரம்பகால ஐரோப்பிய காலனித்துவ நாடுகள் இரண்டின் பெயரினைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

31. இலங்கையில் காலனித்துவ விதைகளைத் தூவிய ஐரோப்பிய நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

32. ஒடுக்குமுறை அரசியல் இயந்திரங்களுக்கு உதாரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

33. நவ – தாராண்மைவாத அரசியல் எண்ணக்கருவினை அறிமுகம் செய்த முதன்மை சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

34. லிபறல்வாத ஜனநாயக அரசின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

35. சோசலிச அரசின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

36. பாசிச அரசின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

37. சமூக ஒப்பந்தவாதக் கருத்தியலைக் கோட்பாடாக முன்வைத்த சிந்தனையாளர்களுள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**

38. பின்வரும் நூல்களை எழுதிய அரசியல் சிந்தனையாளர்கள் யாவர்?
**1)** லேவியாதன் **………………………………**
**2)** இரு அரசாங்கத்தின் இரு உடன்படிக்கை **………………………………**

39. பின்வரும் ஆட்சி முறையை வலியுறுத்திய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டுச் சிந்தனையாளர்கள் யாவர்?
**1)** பூரண முடியாட்சி **………………** **2)** மக்களாட்சி **……………………**

40. ஆரம்பகால தாராண்மை வாதக் கோட்பாட்டை முன்வைத்த பொருளியலாளர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.
**1)…………………………………** **2)………………………………**